**மண்ணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ)**
**அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை : திரு.எஸ்.ராஜேந்திரன்.**

ந.க.தி1/5425/2018 நாள்:3.06.2019.

பொருள் மனைப்பிரிவு பதிவு செய்தல் - மண்ணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றியம் - திருவெள்ளரை ஊராட்சி மற்றும் கிராமம் சர்வே எணகள்: 191/5பாகம், 434/5B,6-ல் கட்டுப்பட்ட 4.81 ஏக்கர் பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டது- மனைகளை பதிவு செய்வதற்கு அனுமதித்து உத்தரவிடுதல் - தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை எண்.78 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை ந.வ.4(3) நாள்-04.05.2017.
2. அரசாணை எண்.172 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை ந.வ4(3) நாள்: 13.10.2017.
3. நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர், திருச்சிராப்பள்ளி மண்டலம் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்: 364/2018/திம2 நாள்: 03.10.2018
4. மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (மண்டலம்-1) ஆய்வறிக்கை
5. மனதாரர் திரு. P. பாலசுப்ரமணியன் என்பவரது விண்ணப்பம்.
6. திருவெள்ளரை ஊராட்சி மன்ற தீர்மான எண்:205 நாள்: 03.06.2019

***********

உத்தரவு:

மண்ணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றியம் திருவெள்ளரை ஊராட்சி மற்றும் கிராமம் சர்வே எண்கள்: 191/5பாகம், 434/5B,6-ல் கட்டுப்பட்ட 4.81 ஏக்கர் பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்தி ம.வ.(வ)/ந.ஊ.உ.இ (திம) எண்: 655/2018 என எண்ணிடப்பட்டு பார்வை 3-ல் காணும் நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர், திருச்சிராப்பள்ளி மண்டலம் அவர்களால் வரன்முறைப்படுத்தப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.


எனவே, மண்ணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த திருவெள்ளரை ஊராட்சியில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் அடிப்படையில் மேற்படி மனைப்பிரிவுகளை அங்கீகரித்து பார்வை 1 மற்றும் 2-ல் காணும் அரசாணைகளில் தெரிவித்துள்ள நிபந்தனைகளுடன் பார்வை 3-ல் காணும் நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர், திருச்சிராப்பள்ளி மண்டலம் அவர்களின் நடவடிக்கையில் தெரிவித்துள்ள நிபந்தனைகளை பின்பற்றி மனை எண்கள்: 1, 2, 5, 6, 7, 24, 34, 42, 43, 62, 63, 57, 58, 106, 107 ஆகிய 15 மனைப்பிரிவுகளை பதிவு செய்திட அனுமதித்து இதன்வழி உத்தரவிடப்படுகிறது.

1. தனி மனைகளை விற்பனை செய்யும்போது எந்தவித ஆக்கிரமிப்பும் செய்யக்கூடாது.
2. தனி மனைகளில் வீடு கட்டுவதற்கு தனியாக விண்ணப்பித்து அனுமதி பெறப்படவேண்டும்.
3. மனைப்பிரிவிற்கு அருகில் உள்ள நீர்நிலை பாசன வாய்க்கால்களை அடைக்கவோ, ஆக்கிரமிப்போ செய்யக்கூடாது.

வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ),
ஊராட்சி ஒன்றியம்,மண்ணச்சநல்லூர்.

பெறுநர் : திரு. P. பாலசுப்ரமணியன்,
கணபதி நகர், திருவானைக்கோவில், ஸ்ரீரங்கம், திருச்சி - 621 005.

நகல்: உறுப்பினர் செயலர், திருச்சிராப்பள்ளி உள்ளூர் திட்டக்குழுமம், அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.




மண்ணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றியம் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்களின் செ.மு.எண்: கி1/3425/2018 நாள்: 03.06.2019-ன் படி திருவெள்ளரை ஊராட்சி மற்றும் கிராமசர்வே எண்: 191/5பாகம், 434/5B,6 -ல் உட்பட்ட மனை எண்கள்: 1,2,5,6,7,24,34,42,43,62,63,57,58, 106,107 ஆகிய 15 மனைப்பிரிவுகளை பதிவு செய்திட அனுமதிக்க ~~உத்தரவானை~~ இதன்வழி உத்தரவுப் படியே.

ரை.வின் 3/6/19

வரைவாளர் நிலை-III மேற்பார்வையாளர் / வ.நி-II

வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
ஊராட்சி ஒன்றியம், மன்னச்சநல்லூர்.

# நகர் ஊரமைப்புத் துறை

## திருச்சிராப்பள்ளி மண்டலம்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், மண்ணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றியம், திருவெள்ளரை ஊராட்சி மற்றும் கிராமம், சர்வே எண்கள்: 191/5 பாகம், 434/ 5 B, 6.-ல் அமையும் வரன்முறைப்படுத்தப்பட்ட மனைப்பிரிவிற்கான தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடம்.

கோப்பு எண் : 364 / 2018 திம 2

அளவு : 1 : 800

வ

**குறிப்புகள்:**

மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு : 4.81ஏக்கர் ( 209523 ச.அடி)

மனைப்பிரிவு இடத்தின் எல்லை

நிலையிலுள்ள சாலை

மொத்த மனைகளின் எண்ணிக்கை : 110

விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை : 10 (பரப்பு 12940 ச.அடி)
(மனை எண்கள் :3, 4, 33, 73, 74, 85, 97, 98,108,109)

விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை : 93 (பரப்பு133593 ச.அடி)
(மனை எண்கள் :1, 2, 5-32, 34-72, 75-84, 86-96, 99-107,110)

ஒதுக்கப்பட்ட மனைகள் : 103
(மனை எண்கள் : 1-47, 50, 56-110)

**உள்ளாட்சிக்கு உரிமையாக்கப்பட வேண்டியவை :**

மனைப்பிரிவு சாலைகள் :

பொது ஒதுக்கீடு

பூங்கா1- (48, 49) : 5691 ச.அடி

பூங்கா2- (51,52,53,54,55) : 7743 ச.அடி

மொத்தம் பரப்பு : 13434 ச.அடி **(10.05%)**

**கட்டிட வரம்பு :**

9.0 மீ. அகல சாலைகளுக்கு கீழ் 1.5.மீ. மற்றும் 9.0.மீ க்கு மேல்12.0 மீ. வரை அகலமுள்ள சாலைகளுக்கு 3.0மீ. விடப்பட வேண்டும்

**நிபந்தனைகள் :**

1. அரசாணை எண்-78 வீட்டு வசதி மற்றும் நகர் புற வளர்ச்சி துறை நாள் 4.5.2017 மற்றும் அரசாணை எண் 172, வீட்டு வசதி மற்றும் நகர் புற வளர்ச்சித் துறை நாள்: 13.10.2017 -ன் படி, பெறப்பட்ட மனுதாரரின் விண்ணப்பத்தின் அடிப்படையில் வரைபடம் தயார் செய்யப்பட்டுள்ளது. அரசாணை எண் 172-ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உரிய கட்டணங்களை தனி மனை உரிமையாளர்களிடம் இருந்து உள்ளாட்சியால் பெற்றுக் கொண்டு தனி மனையினை முறைப்படுத்தப்படல் வேண்டும்.
2. மனைப்பிரிவு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மனை அளவுகள், புல எண்கள் மற்றும் உத்தேச சாலை அமைப்புகள் ஆகியவற்றில் மாற்றம் ஏதும் இருப்பின் சரியான விபரங்கள் குறிப்பிட்டு திருத்திய மனைப்பிரிவுக்கு விண்ணப்பித்து உரிய அனுமதி பெற்றுக்கொள்ள படல் வேண்டும்.
3. இம்மனைப்பிரிவில் கண்டுள்ள சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகள் அரசாணையின் படி உள்ளாட்சிக்கு உரிமையுடையது என்பதால் அப்பகுதியினை வருவாய் உட்பிரிவு செய்து உள்ளாட்சியின் உரிமையில் வழங்க நில அளவைத் துறையால் நடவடிக்கை மேற்க்கொள்ளப்படல் வேண்டும்.
4. தனிமனைகளுக்கு உள்ளாட்சியால் அனுமதி வழங்கபடும் போது நில உரிமம் மனை அளவுகள் ஆகியவற்றினை பெறப்பட்ட ஆவணங்களின்படி உறுதி செய்து கொண்டு தனி மனைகள் வரன் முறைப்படுத்த படல் வேண்டும்.
5. இம்மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு துறையால் சட்டப்பூர்வமாக வரன்முறைப்படுத்தப்பட்டு தொழில் நுட்ப ஒப்புதல் அளிப்பதன் மூலம் நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை எனவே மனை உரிமையாளர்கள் சொத்தின் உரிமையை உறுதி படுத்திக் கொள்ள வேண்டும். வேறு யாரேனும் உரிமை கோரினால் அதற்குப் பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ள வேண்டும். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை பொருத்தமான அமைப்பு இல்லை.
6. மனைப்பிரிவினை ஏர்படுத்துவதற்காக பொது நீர் பாசன வாய்க்கால் எதுவும் தடை செய்யப்படவில்லை / ஆக்கிரமிப்பு செய்யப்படவில்லை என்பதனை வட்டாட்சியர் அவர்கள் மூலம் உள்ளாட்சியால் உறுதி செய்து கொள்ளப்பட வேண்டும்.
7. இம்மனைப்பரிவில் உள்ள மனைகளை மட்டுமே வரன்முறைப்படுத்தி உத்தரவு வழங்கப்படுகிறது. மனையில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களுக்கு தனியாக விண்ணப்பித்து ஒப்புதல் பெற்றுக் கொள்ள வேண்டும்.

**ம.வ.(வ) / ந.ஊ.உ.இ(திம) எண் : 655/2018**

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்
திருச்சிராப்பள்ளி மண்டலம்